**தலைப்பு - 124 - சமூக சேவைகள் அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2013 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கை இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

1 ஆவது பகுதி - அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை

2 ஆவது பகுதி - ஒவ்வொரு தலைப்பிற்கும் உரிய விபரமான அறிக்கை

**I ஆவது பகுதி**

**சமூக சேவைகள் அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் மீதான சுருக்கமான அறிக்கை**

---

**1. அமைச்சின் கீழுள்ள திணைக்களம்**

| தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 216 | சமூக சேவைகள் திணைக்களம் |

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த ஏற்பாடுகள் மற்றும் செலவுகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்தத் தேறிய ஏற்பாடு ரூபா 3,906,576,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் இதில் ரூபா 3,480,192,721 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் படி அமைச்சு மற்றும் திணைக்களத்தின் தேறிய ஏற்பாட்டில் சேமிப்பு முறையே ரூபா 406,437,549 மற்றும் ரூபா 19,945,730 தொகை அதாவது மொத்த தேறிய ஏற்பாட்டில் 11.5 சதவீதத்திற்கும் 5 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் இருந்தது. விபரம் பின்வருமாறு.

| தலைப்பு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | சேமிப்பு தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 124 | 3,534,231,000 | 3,127,793,451 | 406,437,549 | 11.5 |
| 216 | 372,345,000 | 352,399,270 | 19,945,730 | 5.4 |
| மொத்தம் | 3,906,576,000 | 3,480,192,721 | 426,383,279 | 10.9 |

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள திணைக்களத்திற்குரித்தான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் பின்வருமாறாகும்.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 12401 | 8,000,000 | 4,110,317 | 3,500,000 | 4,371,503 | 48,000,000 | 17,762,623 |
| 21601 | 18,200,000 | 9,852,283 | 11,200,000 | 14,448,028 | 100,000,000 | 52,356,399 |

## 2.3 கட்டுநிதி மற்றும் பொது வைப்புக் கணக்குகள்

### 2.3.1 கட்டுநிதிக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 182,617 ஆகக் காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| **அமைச்சு/ திணைக்களம்** | **கட்டுநிதிக் கணக்கு இல** | **2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
|---|---|---|
| --------------- | -------------------------- | -------------------- |
| | | **ரூபா** |
| சமூக சேவைகள் அமைச்சு | 7002/0000/000/0324/0013/000 | 182,575 |
| சமூக சேவைகள் திணைக்களம் | 7002/0000/000/0105/0013/000 | 42 |
| | | ------------ |
| **மொத்தம்** | | 182,617 |
| | | ======= |

### 2.3.2 பொது வைப்புக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,745,605 ஆக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| **அமைச்சு / திணைக்களம்** | **வைப்புக் கணக்கு இலக்கம்** | **2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மீதி** |
|---|---|---|
| ------------------------ | --------------------- | ---------------------------- |
| | | **ரூபா** |
| சமூக சேவைகள் அமைச்சு | 6000/0000/0003/0580/000 | 3,230,521 |
| சமூக சேவைகள் திணைக்களம் | 6000/000/0015/0097/000 | 1,515,084 |
| | | ------------------- |
| மொத்தம் | | 4,745,605 |
| | | ========= |

## 2 ஆவது பகுதி

## ஓவ்வொரு தலைப்பிற்குமான விரிவான அறிக்கை

### 1. தலைப்பு- 124 - சமூக சேவைகள் அமைச்சு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

சமூக சேவைகள் அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணைக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 ஒக்தோபர் 20 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணைக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணைக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது செவ்வை பார்த்தலின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

### 1.2 கணக்குகள் மற்றும் இணைக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் சமூக சேவைகள் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) முதல் (உ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 1.4 முதல் 1.13 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(அ) புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை**

அமைச்சினால் நிதிப் பிரமாணம் 110(1) இன் பிரகாரம் இழப்புப் பதிவேடு, முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்க வில்லை.

**(ஆ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

பற்றுச்சீட்டுக்கள், விநியோக விபரம், வேலைப் பூர்த்தி சான்றிதழ், உடன்படிக்கைப் பத்திரங்கள் ஆகிய தேவையான சான்றுகள் அமைச்சில் இன்மையால் ரூபா 1,225,384 கூட்டுத்தொகையான தொகைக்கு உரித்தான 8 கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தப்பட முடியாதிருந்தது.

**(இ) கணக்காய்வு ஐயவினாக்களுக்கான பதில்கள் வழங்கப்படல்**

மீளாய்வாண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட 08 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2014 ஒக்டோபர் 15 ஆம் திகதி வரையிலும் பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் அவ் ஐயவினாக்களுக்கு உரித்தான கணிப்பிடப்படக் கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 2,087,168,226 ஆகக் காணப்பட்டன.

**(ஈ) பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 05 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 3,795,000 தொகையான மொத்தத் தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 14 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடுகள் செய்யப்பட்ட காரணத்தினால் ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அச்செலவின விடயத்திற்குரிய தேறிய ஏற்பாட்டில் 10 சதவீதத்திற்கும் 61 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தன.

**(உ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) விடய இல 12401 இன் முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 41,530 தொகையாக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகளை அறவீடு செய்ய அமைச்சு தவறியிருந்தது.

(ii) அமைச்சினால் பேணப்பட்ட கட்டுப்பாட்டுக் கணக்குகளில் சில ஆண்டுகள் முதல் முன்கொண்டுவரப்பட்ட ரூபா 1,588 தொகையான இனங்காணப்பட்டு சீராக்கப்படுவதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) ரூபா 233,152 பெறுமதியான கணக்கீட்டுத் தவறுகள் 2014 மே மாதம் வரையிலும் சீராக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

---

அமைச்சிடமுள்ள சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

---

2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க

அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2013 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2014 மார்ச் 15 ஆந் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சினால் குறித்த அறிக்கை 2014 யூன் 25 ஆந் திகதியேயும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற முறையில் பயன்படுத்துதல்**

கடற்றொழில் அமைச்சிற்கு உரித்தான 3 வாகனங்களும் காணி அமைச்சிற்கு உரித்தான 3 வாகனங்களும் அமைச்சின் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அவ் வாகனங்களைக் கையேற்பதற்கோ அல்லது மீளக் கையளிப்பதற்கோ உரிய நடவடிக்கைகள் 2014 மே மாதம் வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 1.5 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே விபரித்துக் காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
| --- | --- | --- |
| | **ரூபா** | |
| **(அ)** இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணம் | | |
| (i) நிதிப் பிரமாணம் 104(1) | 1,831,095 | ரூபா 500,000 தொகையும் இதற்கு மேலான பெறுமதியான நட்ட இழப்புகள் தொடர்பாக பிரதான கணக்களிப்பு உத்தியோகத்தரால் ஆய்வுக் குழு ஒன்று நியமிக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | | | வேண்டிய போதிலும் வாகன விபத்து ஒன்றுடன் தொடர்பாக அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப் பிரமாணம் 104(3) | - | 11 வாகனங்களுக்கு நேர்ந்த 15 விபத்துக்களின் நட்ட இழப்புகள் தொடர்பாக பூர்வாங்க அறிக்கையின் மூலம் நட்டம் நிர்ணயிக்கப்பட்டு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நி.பி. 104(4) | | வாகன விபத்துத் தொடர்பாக முறையான விசாரணைச் சபை நியமிக்கப்பட்டு பூரண அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) பொது நிருவாகச் சுற்றுநிரூபம்

------------------------------------------------

2008 யூன் 26 ஆந் திகதிய 13/2008 ஆம் இலக்க சுற்றறிக்கையின்

| | | |
|---|---|---|
| - 2 ஆம் பந்தி | 540,425 | வாகனத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த எரிபொருள் எல்லைகளில் உத்தியோகபூர்வ தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 06 மாத காலப்பகுதியின் போது மிகையான எரிபொருள் பெறப்பட்டிருந்தது. |
| 4 ஆம் பந்தி | 103,126 | 2013 பெப்ரவரி முதல் மே வரை செயலாளரால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த மிகையான எரிபொருள், எரிபொருட் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

(இ) அரசாங்க நிதிச் சுற்றறிக்கை

-------------------------------------------------

2010 செப்தெம்பர் 01 ஆம் திகதிய 446 ஆம் இலக்க சுற்றறிக்கையின்

| | | |
|---|---|---|
| - 2 ஆம் பந்தி | 20,317 | சுற்றறிக்கையில் உள்ளடக்கப்படாத Peo Tv மற்றும் வேறு தொலைக்காட்சி நிகழ்ச்சி அலைவரிசை வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காகக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| -3-1(vi) ஆம் பந்தி | 32,913 | உத்தியோகத்தரினதோ அல்லது அவரது துணையினதோ பெயரில் அல்லாத தொலைபேசிச் செலவினம் மீளளிக்கப்பட்டிருந்தது. |

(ஈ) அரசாங்க நிதி, திட்டமிடல் அமைச்சுச் சுற்றறிக்கை

---------------------------------------

2010 ஒக்டோபர் 11 ஆம் திகதிய நி.தி.இ. 01/2010/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின்

| | | |
|---|---|---|
| - 3 ஆம் பந்தி | 255 அமெரிக்க டொலர் | நிகழ்ச்சித்திட்டத்திற்குரித்தான சகல செலவினமும் பங்களிப்பு நிறுவகம் செலுத்தப்படுவதற்கு கடப்பாட்டிற்கு உட்பட்டிருக்கையில் அமைய படிகளாக ஒரு நாளுக்கு 30 டொலர்களின் படி 8 ½ நாட்களுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. |
| - 7 ஆம் பந்தி | 500 அமெரிக்க டொலர் | கல்வி செயலமர்வொன்றில் கலந்துகொண்ட ஓர் குழுவின் குழுத் தலைவராக செயற்படுவதற்காக உரித்தற்ற ஓர் உத்தியோகத்தருக்கு 500 அமெரிக்க டொலர் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. |
| - 5(i) ஆம் பந்தி | 630 அமெரிக்க டொலர் | வெளிநாட்டு நிறுவகத்தால் போக்குவரத்துச் செலவினம் அரச கட்டணங்கள் மற்றும் விடுதிக் கட்டணங்கள் ஏற்கப்படுவதற்கு |

உடன்பட்டிருக்கையில் 21 நாட்களுக்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**1.6 செயற்திட்டம் நடைமுறைப்படுத்தலிலான நலிவுகள்**

செயற்திட்டம் செயற்படுத்தப்படுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) கால தாமதத்தின் பின்னர் வேலை ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 124-2-5-16-2502(13) ஆம் இலக்க செலவின விடயங்களின் கீழ் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த ‘‘திரிசவிய செயற்திட்டம்’’ 2013 சனவரி முதல் மார்ச் வரை செயற்படுத்தப்படாது மாற்றுத்திறனாளிகளுக்கு தொழில் திறன் பயிற்சி வழங்கும் நடவடிக்கைகள் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிராமையால் மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாட்டுத் தொகையில் ரூபா 4,000,005 தொகை அதாவது 34 சதவீதம் எஞ்சியிருந்தது.

(ii) அமுணுகும்புர மற்றும் தெலம்புயாய மாற்றுத் திறனாளிகளுக்கு தொழில் திறன் பயிற்சி நிலைய மாணவர்களின் விடுதி வசதிகள் மற்றும் சுகாதார வசதிகள் வழங்கப்படுவதற்காக 124-2-5-2104 செலவின விடயத்தின் கீழ் ரூபா 76 மில்லியன் தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அந்நடவடிக்கைகள் தாமதமடைந்து மீளாய்வாண்டின் இறுதியிலேயே ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) நிதி விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றல் அடைந்திராத செயற்திட்டங்கள்**

மீளாய்வாண்டின் போது வயது முதிர்ந்தோர் படிப்பணமாகச் செலுத்துவதற்காக 03 செயற்பாடுகள் பின்பற்றப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) படிப்பண முறை செயற்படுத்தப்படுகையில் நிலவிய பல்வேறு குறைபாடுகளால் வயது முதிர்ந்தோருக்கு ரூபா 151,021,529 தொகையான படிப்பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) 2013 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்குரித்தான வயது முதிர்ந்தோர் படிப்பணம் செலுத்தப்படுவதற்காக மாவட்டச் செயலகங்களுக்கு ரூபா 321,360,000 தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும் அத் தொகையில் வயது முதிர்ந்தோருக்கு செலுத்தப்பட்ட தொகை செலுத்தப்படாது எஞ்சியுள்ள தொகை மற்றும் இரண்டு மாத காலப்பகுதிக்குரித்தான செலுத்தப்பட வேண்டிய வயது முதிர்ந்தோருக்கான படிப்பணம் எவ்வளவு என்பது குறித்தும் அமைச்சால் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(iii) 2013 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் முதியோர் படிப்பணமாகச் செலுத்தப்பட்டிராத பணத்தை மீள அமைச்சிற்கு மீள அனுப்பிவைக்கப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 24 பிரதேச செயலகங்களும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. 2013 மே மாதம் முதல் திசெம்பர் மாதம் வரை முதியோர் படிப்பணம் செலுத்தப்படுவதற்காக மாவட்டச் செயலகத்திற்கு வழங்கப்பட்ட ஏற்பாடுகளுக்கு உரித்தான உள்ளபடியாகச் செலுத்தப்பட்ட பணம் மற்றும் படிப்பணத்தை பெற்றுக்கொண்டவர்களின் எண்ணிக்கை பிரதேச செயலக காரியாலய மட்டத்தில் காண்பிக்கக்கூடிய வகையில் பொழிப்புச் செலவின அறிக்கை அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் இதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிராத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

## 1.7 செயலாற்றல்

2013 ஆம் ஆண்டின் பாதீட்டு மதிப்பீடு/ கூட்டிணைந்த திட்டம்/ செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி அமைச்சின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) கூட்டிணைந்த திட்டம் செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் இணங்கியிராமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2012 – 2016 காலப்பகுதிக்குரித்தாகத் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தில் மாற்றுத் திறனாளிகளின் உரிமைகள்

தொடர்பான புதிய அதிகாரச்சட்டம், தேசிய ஆலோசனை அதிகாரச்சட்டம் மற்றும் சைகை மொழி அதிகாரச்சட்டம் அங்கீகரித்துக் கொள்வது அமைச்சின் நோக்கின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவ் அதிகாரச்சட்டங்களின் வரைவுகள் மீளய்வாண்டின் இறுதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கூட்டிணைந்த திட்டத்தின் படி, மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றுத் திறனாளிகளின் சங்கத்திற்கு உரித்தான 05 நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடங்கியிராத போதிலும் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(iii) 124-2-5-12-2502(13) மற்றும் 124-2-5-12-2502 ஆம் இலக்க செலவின விடயத்தின் கீழ் ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையே உள்ள உதவி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான தொழிற்திறன் பயிற்சி நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்கான ரூபா 124,300,000 தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அந் நிகழ்ச்சித்திட்டங்கள் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) வருடாந்த மதிப்பீட்டிலும் செயல்நடவடிக்கைத் திட்டத்திலும் சமூக அபிவிருத்தி முகாமைத்துவ தகவல்கள் முறைமையைத் தயாரிப்பதற்காக ரூபா 500,000 தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அது கூட்டிணைந்த திட்டத்தில் இது உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) போதியளவில் மேற்கொள்ளப்படாத செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இலங்கையின் குடும்பக் கொள்கை எனும் பெயரில் சமூக சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த அமைச்சரவை விஞ்ஞாபனம் தொடர்பாக 2012 பெப்ரவரி 22 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் படி பொருளாதார, சமூக மற்றும் கற்கை

ரீதியாக குடும்பங்களை பலப்படுத்தி, சமூகத்தின் அடிப்படைப் பிரிவாக அதனை வலுப்படுத்துவதற்காக மேலும் விரிவான ஓர் கட்டமைப்புடன் குடும்பக் கொள்கை, தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் அதனோடிணைந்த தரப்பினரையும் விசாரித்து தயாரிக்கப்பட்டு இதன் படி, குடும்பக் கொள்கை மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் 02 மாதங்களுக்குள் அமைச்சரின் மூலம் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் இது மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) திருத்தப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி, 366 சுய உதவி நிகழ்ச்சித்திட்டங்களையும் 25 சைகை மொழி நிகழ்ச்சித்திட்டங்களையும் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 115 சுய உதவி நிகழ்ச்சித்திட்டங்களும் 01 சைகை மொழி நிகழ்ச்சித்திட்டமும் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

**(இ) முன்னேற்ற அறிக்கைகளின் மூலம் உள்ளபடியான பௌதீக மற்றும் நிதி செயலாற்றல் சமர்ப்பிக்கப்படாமை**

(i) மீளாய்வாண்டின் இறுதிக் காலாண்டிற்கு உரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த முன்னேற்ற அறிக்கையின் மூலம் காண்பிக்கப்பட்டிருந்த பௌதீக நிலை நிதிச் செயலாற்றல் நிலையின் உள்ளபடியான செயலாற்றல் நிலையுடன் இணங்கியிருக்கவில்லை. அத்தகைய சில சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகும்.

| நிகழ்ச்சித்திட்டம் | திட்டத்தின் படி எதிர்பார்க்கப்பட்ட அளவு | | முன்னேற்ற அறிக்கையின் வெளிப்படுத்தல் | | உள்ளபடியான அளவு | | முன்னேற்ற அறிக்கை மற்றும் உள்ளபடியான அளவிற்கும் இடையேயான வேறுபாடு | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **CBR நிகழ்ச்சித்திட்டம்** | பௌதீக | நிதி ரூபா | பௌதீக | நிதி ரூபா | பௌதீக | நிதி ரூபா | பௌதீக | நிதி ரூபா |
| கோமட் மலசலகூடம் | 75 | | 47 | | 65 | | 18 | |
| நீர் மெத்தை | - | | 14 | | 06 | | 08 | |
| நுழைவு வசதிகள் | 25 | 2,000,000 | 13 | 2,111,000 | 06 | 271,336 | 07 | 1,839,664 |
| மின்சார வசதிகள் | - | | 11 | | 03 | | 08 | |
| ஏனைய வசதிகள் | 25 | | 23 | | 41 | | 18 | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுசநென புபுதுவ நிகழ்ச்சித்திட்டம் | | | | | | | | | |
| ------------------------ | | | | | | | | | |
| தொண்டர் தலைவர்கள் | 160 | 8,000,000 | 466 | 8,000,000 | 514 | - | 48 | | - |
| புத்தகக் கொள்வனவு | 4000 | 9,000,000 | 5445 | 9,000,000 | 7180 | 1,299,102 | 1735 | | 7,700,898 |
| **தனிப்பட்ட முறைமை** | | | | | | | | | |
| --------------------- | | | | | | | | | |
| தனிப்பட்ட முறைமையின் கீழ் சுய தொழில் | 535 | 5,350,000 | 621 | 5,875,000 | 674 | 6,311,000 | 53 | (436,000) | |
| சிறிய குழுக்களுக்காக உதவி வழங்குதல் | 25 | 1,025,000 | 18 | 1,025,000 | 10 | 630,000 | 08 | 395,000 | |
| சுயதொழில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 08 | 400,000 | 06 | 100,000 | 06 | 77,860 | - | 22,140 | |

(ii) தொண்டர் சேவைகள் செயலமர்வுகள் சமூகத் தலைவர்களுக்கான செயலமர்வுகள் மற்றும் சுய சக்திக்குழுக்களை ஸ்தாபிக்கும் செயலமர்வுகள் தொடர்பாக் திருத்தப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி எய்தப்பட வேண்டிய இலக்காக நபர்களின் எண்ணிக்கை குறிப்பிடப்பட்டிருந்ததுடன் செயன்முன்னேற்ற அறிக்கைகளில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கையாகக் குறிப்பிடப்பட்டிருந்தமையால் எதிர்பார்க்கப்பட்ட செயன்முன்னேற்றத்தை ஒப்பிட்டுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

(iii) உதவி உபகரணங்களை வழங்குவதற்காக ரூபா 1,839,664 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் செயன்முன்னேற்ற அறிக்கைகளில் இது ரூபா 2,111,000 ஆக ரூபா 271,336 அளவில் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் படி, மேலதிகமாகக் காண்பிக்கப்பட்டிருந்த தொகை செலவிடப்பட்ட தொகையில் 14.7 சதவீதத்தைக் கொண்டிருந்தது.

(ஈ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் முன்னேற்றத்தை மிகை மதிப்பிடல்

2013 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காண்பிக்கப்பட வேண்டிய இலக்கைக் கழித்துக் காண்பிப்பதன் மூலம் 2013 ஆம் ஆண்டின் போது மாவட்டக் குழுக் கூட்டங்களில் செயன்முன்னேற்றம் 56 சதவீதத்தாலும் மாகாண உதவி உத்தியோகத்தர் செயலமர்வுகளின் முன்னேற்றம் 100 சதவீதத்தாலும் அடிப்படைக் குழுக்களின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களின் முன்னேற்றம் 316 ஆலும் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| விபரம் | ஆண்டின் போது நடாத்தப்பட வேண்டிய செயலமர்வுகள்/ கூட்டங்களின் எண்ணிக்கை | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காண்பிக்கப்பட்ட இலக்கிடப்பட்ட செயலமர்வுக் கூட்டங்களின் எண்ணிக்கை | வேறுபாடு | முன்னேற்றம் % |
|---|---|---|---|---|
| • மாவட்டக் குழுக் கூட்டங்கள் (25 மாவட்டத்தில் ஒரு காலாண்டிற்கு ஒரு கூட்டப்படி (25 X 4) | 100 | 64 | 36 | 56 |
| • மாகாண உதவி உத்தியோகத்தர் செயலமர்வு (மாதத்திற்கு 1 வீதம்) | 12 | 06 | 06 | 100 |
| • அடிப்படைக் குழு முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் (25 மாவட்டங்களில் 06 மாதங்களுக்கு 1 வீதம்) | 50 | 12 | 38 | 316 |

**(உ) மதிப்பீடு தயாரித்தலிலான நலிவுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 ஆம் ஆண்டின் போது 160 தொண்டர் தலைவர்களுக்கு பயிற்சிகள் வழங்குவதற்காக ரூபா 800,000 தொகை

செலவிடப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் ஒரு தலைவருக்காக ரூபா 5,000 தொகை மதிப்பிடப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 800,000 தொகை செலவிடப்பட்டு 466 தொண்டர் தலைவர்கள் பயிற்றுவிக்கப்பட்டிருந்தனர். இதன் படி, உள்ளபடியாக ஒரு தலைவரைப் பயிற்றுவிப்பதற்கு ரூபா 1,717 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ii) 2013 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கும் 20 சிசு நெந புபுதுவ கியவீமே நிலையங்களை ஆரம்பிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்தமையால் ஒரு நிலையத்திற்காக ஆகக் குறைந்தது 15 தொண்டர் தலைவர்களின் படி 300 பேர் பயிற்றுவிக்கப்பட வேண்டிய போதிலும் 160 பேர் மாத்திரமே பயிற்றுவிக்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது.

## 1.8 விளைவற்றவிதத்தில் வெளித்தரப்பினர்களிடம் உள்ள பணம்

2012 நவம்பர் முதல் 2013 பெப்ரவரி வரை முதியோர் படிப்பணக் கொடுப்பனவிற்காக தபால் திணைக்களத்தின் 14 மாவட்ட கணக்கு அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த தொகை ரூபா 81,055,800 தொகை முதியோர் படிப்பணமாக செலுத்தப்படாது 03 மாதங்கள் முதல் 10 மாதங்கள் வரை கடந்திருந்த போதிலும் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.9 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல்வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையிலானவையாகக் காணப்பட்டன. தெரிவுக் கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட அத்தகைய சில கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

(அ) 2011 யூன் 16 ஆம் திகதி முதல் 2013 யூன் 18 ஆம் திகதி வரையான காலப்பகுதியின் போது அமைச்சின் வாகனமொன்று ஏறத்தாழ 85,000 கிலோ மீற்றர்கள் பயணித்திருந்தன. அக் காலப்பகுதிக்குரித்தான அவ் வாகனத்தின் பழுதுபார்த்தலுக்காக ரூபா 561,943 தொகை செலவிடப்பட்டிருந்தது. இதன் படி, ஒரு

கிலோமீற்றருக்கான பழுதுபார்த்தல் செலவினம் ரூபா 6.61 எனும் உயர் செலவினம் அமைச்சால் ஏற்கப்பட்டிருந்தது.

(ஆ) 2012 நவம்பர் 22 ஆம் திகதி கொழும்பில் விபத்திற்குள்ளான அமைச்சிற்குரித்தான வாகனம் அவ் விபத்தினால் நேர்ந்துள்ள இழப்பை கணிப்பிட்டிராததுடன் இது தொடர்பாக நிதிப் பிரமாணம் 103 மற்றும் 104 இன் பிரகாரம் 2013 ஒக்டோபர் 31 வரையிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) அமைச்சிற்குரித்தான ஓர் வாகனத்திற்கு வேறோர் வாகனம் பின்னால் வந்து மோதியமையால் விபத்திற்குள்ளாகியிருந்த போதிலும் அரசாங்கத்திற்குரித்தான வாகனத்திற்கு நேர்ந்த நட்டம் தொடர்பாக அமைச்சால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.10 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்களில் சில கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) மேலதிக எரிபொருளுக்காக உரித்தற்ற போதிலும் அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சரின் பதவியணி உத்தியோகத்தர்கள் மூவர் மாதாந்த எரிபொருள் படிப்பணத்திற்கு மேலதிகமாக ரூபா 175,294 தொகையான மேலதிக எரிபொருளைப் பெற்றிருந்தனர்.

(ஆ) ஓர் சங்கத்திற்காக 05 சந்தர்ப்பங்களின் போது ரூபா 2,685,468 பெறுமதியான செயற்கைக் கால்களின் உற்பத்திக்கு தேவையான மூலப்பொருட்களின் இறக்குமதிக்காக தீர்வை வரி விலக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அச் சலுகையை வழங்குகையில் உரிய பொருளைப் பகிர்ந்தளிப்பது சமூக சேவைகள் திணைக்களத்தின் கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்படுவதாக நிதி, திட்டமிடல் அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இடர்களுடனான குடும்பங்களின் சீவனோபாயத்தை உயர்த்துவதற்காக சுய தொழில் வேலைவாய்ப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இனங்காணப்பட்ட ஓர் குடும்பத்திற்காக செலுத்தப்பட வேண்டிய ஆகக் கூடுதலான உதவித்தொகை ரூபா 25,000 ஆன போதிலும்

முல்லைத்தீவு மாவட்டத்தின் 08 குடும்பங்களுக்கு ரூபா 40,000 படி ரூபா 320,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) ஓர் அமைப்பால் சமூக சேவைகள் அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்ட அன்பளிப்புத் தொகையை விடுவிக்கப்படுவதற்காக ரூபா 602,714 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அப் பொருட்களில் ஒரு பகுதி மீண்டும் அவ் அமைப்பிற்கே மீள ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(உ) நிலையான சொத்து மறுசீரமைப்பு மற்றும் மேம்படுத்தலின் கீழ் வாகனத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாட்டுத் தொகையில் ரூபா 378,130 தொகை அந் நோக்கத்திற்காக செலவிடப்படாது வாகனப் பராமரிப்பிற்காக செலவிடப்பட்டிருந்தது.

(ஊ) வாகனப் பழுதுபார்த்தல்களின் போது சாரதியால் மேற்கொள்ளப்படும் வேண்டுகோல் அடிப்படையில் தொழில்நுட்ப உத்தியோகத்தரால் பரீட்சிக்கப்பட்டு பரிந்துரைக்கப்பட்டதை அடுத்து முறைப்படி பழுதுபார்த்தலிற்கு ஏற்ற வாகனக் கராஜிற்கு ஒப்படைத்து பழுதுபார்த்தலின் பின்னர் முறையாக பழுதுபார்க்கப்பட்டதாக தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவரால் பரிந்துரைக்கப்பட்டதை அடுத்து கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறன்றி ஒருங்கிணைப்புச் செயலாளரின் பரிந்துரைப்பில் 26 சந்தர்ப்பங்களின் போது ரூபா 592,606 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(எ) 2012 ஆம் ஆண்டின் போது விபத்திற்குள்ளான ஓர் வாகனம் பழுதுபார்க்கப்படுவதற்கோ அல்லது கைதவிர்க்கப்படுவதற்கோ முறையான வேலைகள் பின்பற்றப்படாது தனியார் வாகனத் திருத்துமிடம் ஒன்றில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தமையால் ரூபா 164,400 தொகையான நில வாடகையும் ரூபா 30,000 தொகையான மேலதிக போக்குவரத்துச் செலவினத்தையும் ஏற்க நேர்ந்தது.

(ஏ) ஒப்பந்த நிர்வாகம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(i) செத்சிறிபாய II ஆம் கட்டிடத்தின் முதலாம் மாடியில் ஏ, பீ மற்றும் டீ பிரிவில் சமூக சேவைகள் அமைச்சு மற்றும் ஒருங்கிணைந்த நிறுவக அலுவலகங்களை பிரித்து வேறாக்குவதற்காக தனியார் நிறுவகம் ஒன்றிற்கு ரூபா 17,560,306 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் இது

தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- ஒப்பந்தப் பெறுமதி ரூபா 10 மில்லியனுக்கு மேற்பட்ட எந்த ஒரு வேலை ஒப்பந்தத்திற்குமாக கொள்வனவு நடைமுறை வழிகாட்டியின் 3.8 ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய போட்டிக் கேள்வி முறை பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் வரையறுக்கப்பட்ட விலைகளே கோரப்பட்டிருந்தன.

- அரசாங்கக் கொள்வனவு நடைமுறை வழிகாட்டியின் 5.2.1 ஆம் பந்தியின் பிரகாரம் கேள்விக் கோரல் பதிவேடுகளில் உரிய உள்ளடக்கம் முழுமையாக காண்பிக்க வேண்டிய போதிலும் உரிய மாதிரி மற்றும் அளவீட்டின் பின்னர் மனுக் கோரல் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

- அளவீட்டு அறிக்கை இன்றி ரூபா 17,560,306 தொகை செலுத்தப்பட்ட காரணத்தால் தனியார் நிறுவகம் ஒன்றிற்கு ரூபா 2,663,949 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

- 2013 ஆகஸ்ட் 28 ஆம் திகதி கேள்வி கோரப்பட முன்னர் நடாத்தப்படும் கூட்டங்களுக்கு முறையற்ற விதத்தில் இரு ஒப்பந்தக்காரர்கள் மாத்திரமே கூட்டத்திற்கு கோரப்பட்டிருந்தனர்.

- தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் ஐந்து பேரும் அலுவலகத்தைப் பிரித்து வேறாக்குவது தொடர்பில் விடய அறிவற்ற உத்தியோகத்தர்களாவர்.

- தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் விடய நிபுணராக நியமிக்கப்பட்ட நபர் அரசாங்க தொழிற்சாலையில் இருந்து முழு நேர விடுவிப்புடனான இயந்திரவியல் அதிகாரியாவார்.

- விலைக் கோரலின் போது ஜிப்சம் போட் (Gypsum board) பிரிவுபடுத்தலுக்காக சதுர அடி ஒன்றிற்கு ரூபா 310 படி 3396 சதுர அடிக்காக ரூபா 1,052,784 தொகை செலுத்தப்பட்டிருந்த

போதிலும் இதற்காக விலைக் கோரல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. போட்டி விலைகள் கோரப்பட்டிராமையால் ஆகக் குறைந்த விலையில் வேலை செய்யப்பட்ட சந்தர்ப்பம் கிடைக்கப்பெறாது போயிருந்தது.

- 2014 மார்ச் 03 கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் தீர்மானத்தின் மூலம் ரூபா 13,388,510 தொகையான பெறுமதி சேர் வரியின்றிய தொகைக்கு மேற்கொள்வதற்கு உடன்படிக்கைக்கு உட்பட்டிருந்த ஒப்பந்தத்தின் பெறுமதி ரூபா 15,799,700 வரை ரூபா 2,411,199 தொகையான மேலதிகக் கொடுப்பனவிற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அம் மேலதிகக் கொடுப்பனவுகளின் பெறுமதி தீர்மானிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படுகையில் ஒப்பந்தத்தின் செயற்பாடுகளின் அளவீடுகள் தொடர்பாகவும் கொடுப்பனவு செய்யப்பட்ட பொருள் பட்டியல் மற்றும் கொள்வனவு ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட தகவல்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) செத்சிறிபாய II ஆம் கட்டத்தின் முதலாம் மாடியில் சீ பிரிவில் அலுவலகங்களை பிரித்து வேறாக்கி கம்பளம் விரிக்கும் செயற்பாட்டிற்காக ரூபா 1,440,290 தொகை தனியார் நிறுவகம் ஒன்றிற்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- ஒப்பந்தக்காரர் தேர்ந்தெடுக்கப்பட்ட விதம் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- பிரிவுகளை பிரித்து வேறாக்கும் திட்டம் ஒன்று இருக்கவில்லை.

- பல்வேறு மாதிரியிலான பிரித்தல் முறைகளின் விலைகள் வெவ்வேறாகக் கோரப்பட்டிருக்கவில்லை.

- தகைமையுடைய தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவரினதும் ஆலோசனைச் சேவைகளும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- பல்வேறு வகையிலான பிரித்தல் முறைகளின் விலைகள் கருத்திற்கொள்ளப்படாது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த காரணத்தால் ரூபா 793,039 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

- கம்பளம் விரிப்பதற்கு உரித்தான 131.5 சதுர அடிக்காக ரூபா 221,831 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(iii) மீளாய்வாண்டின் போது அமைச்சரின் அலுவலக மற்றும் பிரதி அமைச்சரின் அலுவலகத்திற்காக ரூபா 206,000 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த பென்ரி கபட் 2014 ஒக்டோபர் மாதமளவில் கதவுகள் கழன்று சேதமுற்ற நிலையில் காணப்பட்டன.

## 1.11 இழப்புகளும் நட்டங்களும்

-----------------------------------

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது கண்டறியப்பட்ட இழப்புகளும் நட்டங்களும் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

(அ) விபத்திற்கு உட்பட்ட ஓர் வாகனத்திற்காக ரூபா 1,831,095 தொகையான பழுதுபார்த்தல் செலவினம் ஏற்பட்டிருந்ததுடன் இதற்காக காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தொகை ரூபா 1,380,756 தொகையாகக் காணப்பட்டது. இதன் படி, ரூபா 450,338 தொகையான நட்டத்தை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) காரிற்கு நேர்ந்த நட்டம் ரூபா 4,700,000 தொகையானதுடன் இத் தொகை இதுவரையில் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.12 முகாமைத்துவ நலிவுகள்

-------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2010 ஆம் ஆண்டின் போது விபத்திற்கு உட்பட்டிருந்த ஓர் வாகனத்திற்கு நேர்ந்த சேதம் தொடர்பாக ஆரம்ப

பரிசோதனையொன்றை மேற்கொள்வதற்கு 2013 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) முதியோர் படிப்பணம் கொடுப்பனவு முறையில் தற்போதுள்ள அதிகாரச்சட்டத்தில் நிலவும் குறைபாடுகள் கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரையிலும் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(i) முதியோர் படிப்பணம் கொடுப்பனவைப் பெறும் பொருத்தமான நலனாளிகள் தொடர்பான தரவுகள் உள்ளடக்கிய தகவல் முறைமை தயாரிக்கப்படல்.

(ii) செலவின அறிக்கைகள் மற்றும் உரிய புள்ளிவிபரங்கள் நாளதுவரையாக்கப்பட்டு தாமதமின்றி தருவிக்கப்படும் நடைமுறை ஒன்று இருக்கவில்லை.

(iii) தேசிய சேமிப்பு வங்கியால், மாவட்டக் கணக்குகள் அலுவலகங்களில், தபாலகங்களிலும் பிரதேச செயலகங்களிலும் செலுத்தப்படாது எஞ்சியுள்ள பணம் இருப்பின் அப் பணத்தொகையைத் தாமதமின்றி தருவிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கும் வேலைத்திட்டமொன்று.

(iv) மாவட்டச் செயலகங்களுக்கு அனுப்பிவைக்கப்படும் ஏற்பாடுகள், செலவினங்கள், மிகைக்கட்டணங்கள் செலுத்தப்படாத படிப்பணம் தொடர்பாக அமைச்சின் மட்டத்தில் தகவல் முறைமை ஒன்று பேணப்பட்டிருத்தல்.

(இ) மன்னார் திருக்கேதீஸ்வரம் முதியோர் இல்லத்தை நிர்மாணிப்பது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(i) இம் முதியோர் இல்லத்தை நிர்மாணிப்பதற்காக கட்டிடத்தைத் திட்டமிடுகையில் மாற்றுத்திறனாளிகளுக்கு வருகை தரக்கூடிய வகையில் அதனை தயாரிப்பதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இந் நிர்மாணிப்பு நடவடிக்கைகளுக்காக 2010 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 18,118,242 தொகை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்ததுடன் மேலும் செலுத்தப்பட வேண்டிய பணத்திற்காக ரூபா 4,811,243 தொகையான ஏற்பாடு மீள்குடியேற்ற மற்றும் அனர்த்த

முகாமைத்துவ அமைச்சினால் மீளாய்வாண்டின் போது அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் குறித்த காலப்பகுதியின் போது அத் தொகை பயன்படுத்தப்படவோ அல்லது திட்டத்தின் படி குறைபாடுகள் சீராக்கப்படுவதற்கான நடவடிக்கைகளோ அல்லது நிலுவைத் தொகையைக் கொடுப்பனவு செய்வது தொடர்பாகவோ முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

**1.13 மனிதவள முகாமைத்துவம்**

**(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளவாறான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளவாறான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 14 | 10 | 04 |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 01 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 410 | 245 | 165 |
| (iv) | ஆரம்ப நிலை | 52 | 48 | 04 |
| (v) | ஏனையோர் (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 04 | 04 | - |
| | மொத்தம் | 483 | 308 | 175 |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 175 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு செயற்பட்டிருக்கவில்லை.

(ஆ) முறையற்ற விதத்தில் வேறு தரப்பினருக்கு விடுவிக்கப்பட்டிருந்த மனித வளங்கள்

சமூக சேவைகள் அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு உரித்தான அமைச்சிலிருந்து சம்பளம் பெறும் உத்தியோகத்தர்கள் இருவர் சமூக சேவைகள் திணைக்களத்தின் முதியோர் செயலக அலுவலகத்தின் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு பணிக்கமர்த்தப்பட்டிருந்தனர்.

(இ) வேறு தரப்பினரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மனிதவளங்கள்

சமூக சேவைகள் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு உரித்தான 02 உத்தியோகத்தர்களும் முதியோர் செயலக அலுவலகத்தின் ஓர் உத்தியோகத்தரும் திணைக்களத்திலிருந்தும் முதியோர் செயலக அலுவலகத்திலிருந்தும் சம்பளத்தைப் பெற்று அமைச்சின் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு பணிக்கமர்த்தப்பட்டிருந்தனர்.

## 2. தலைப்பு 216 - சமூக சேவைகள் திணைக்களம்

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

சமூக சேவைகள் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 ஒக்தோபர் 13 ஆந் திகதி சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது செவ்வை பார்த்தலின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

### 2.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்

மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பேணுதல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதிஅறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் சமூக சேவைகள் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) முதல் (ஈ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் 2.4 முதல் 2.10 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### (அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தால் கீழே காண்பிக்கப்பட்டுள்ள பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிராமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (i) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 இன் 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ii) | சிறுவர் வழிகாட்டல் நிலையங்களின் சில்லறைக் காசேடு | நிதிப் பிரமாணம் 446(3) |
| (iii) | சிறுவர் வழிகாட்டல் நிலையங்களின் - தொலைபேசிப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 845 |

**(ஆ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

(i) விலை கோரல் கடிதங்கள், உபகரணத் தொகுதிகள் பெற்றுக்கொள்ளப்பட்டமைக்கான உறுதிப்படுத்தல், கையொப்பச் சான்றிதழ், வங்கிப் புத்தகங்கள், காசு வைப்பு, பணம் வழங்கப்பட்டமைக்கான எழுத்து மூலச் சான்றுகள், கொள்வனவுகளுக்குரிய தகவல்கள், கையொப்பப் பதிவேடு, செலவின மதிப்பீடு ஆகிய தேவையான சான்றிதழ்கள் திணைக்களத்தில் காணப்படாமையால் ரூபா 5,452,162 தொகைக்கு உரித்தான 08 கொடுக்கல்வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

**(இ) பாதீட்டு முரண்கள்**

ஏற்பாடுகளின் சேமிப்பு

01 ஆம் 02 ஆம் நிகழ்ச்சித்திட்டங்களில் 6 மீண்டெழும் செலவினங்களிற்கும் 05 மூலதனச் செலவினங்களுக்காகவும் மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து அச் செலவின விடயத்திற்கு உரித்தான தேறிய ஏற்பாட்டில் மீண்டெழும் செலவின விடயங்களுக்கு 8 சதவீதம் முதல் 35 சதவீதம் வரையான வீச்சிலும் மூலதனச் செலவின விடயங்களுக்காக 7 சதவீதம் முதல் 67 சதவீதம் வரையான வீச்சிலும் சேமிப்புகள் காணப்பட்டன.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) 21601 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 330,444 தொகையாக இருந்ததுடன் அந் நிலுவை மீதிகளை அறவிடுவதில் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன.

(ii) திணைக்களப் புத்தகங்களின் தனியான மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகை ரூபா 52,417,605 தொகையானதுடன் திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி ரூபா 52,356,399 தொகையாக இருந்தமையால் ரூபா 61,206 தொகையான வேறுபாட்டிற்கான காரணம் 2014 யூலை 30 ஆம் திகதி வரையிலும் கண்டறியப்பட்டிருக்கவில்லை.

(iii) திணைக்களத்திலிருந்து சேவையை விட்டுச்சென்ற 04 உத்தியோகத்தர்களிடமிருந்து 02 ஆண்டுகள் முதல் 12 ஆண்டு கால வீச்சிற்குரித்தான ரூபா 314,723 தொகையான கடன் மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iv) மீளாய்வாண்டின் போது 17 உத்தியோகத்தர்களிடமிருற்து ரூபா 8,610 கூட்டுத்தொகையான கடன் தவணைப்பணம் மேலதிகமாக அறவிடப்பட்டிருந்தது.

## 2.4 சொத்துக்களின் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

பின்வரும் சொத்துக்கள் விளைவற்றும் குறைவான பயன்பாட்டுடனும் காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | சொத்து வகை | அலகுகளின் எண்ணிக்கை | விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான காலப்பகுதி |
|---|---|---|---|
| | | | ஆண்டுகள் |
| (i) | செவிபுலனற்ற மாணவர்களின் அடிப்படை கேட்டல் ஆய்வு இயந்திரங்கள். (Peretone Audiometry machine) | 1 | 10 |

| | | | |
|---|---|---|---|
| (ii) | குருதி அமுக்க இயந்திரம் | 1 | 10 |
| (iii) | வோக்கர் | 02 | 02 ஆண்டுகளுக்கு மேலானவை |
| (iv) | சக்கரத்துடனான வோக்கர் | 126 | 05 ஆண்டுகளுக்கு மேலானவை |
| (v) | தையல் இயந்திரங்கள் (புதியவை) | 15 | 01 ஆண்டிற்கு மேலானவை |

(ஆ) வருடாந்த பொருள்மெய்மையாய்வு நடாத்தப்படல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கெடவல லெவ்ல தொழிற்பயிற்சி நிறுவகத்தின் 536 வகையான பொருட்களின் 2202 உருப்படிகளும் தலைமை அலுவலகத்தின் 40 வகையான பொருட்களின் 163 உருப்படிகளும் சீதுவை தொழிற்பயிற்சி நிறுவகத்தின் 246 வகையான பொருட்களின் 1062 உருப்படிகளில் பற்றாக்குறை தொடர்பாக நிதிப் பிரமாணம் 102 மற்றும் 108(1) இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 03 நிறுவனங்களின் 22 வகையான பொருட்களினது 164 உருப்படிகளில் மிகை அவதானிக்கப்பட்டது.

(இ) தீர்க்கப்படாத பொறுப்புகள்

திணைக்களத்தால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாத ஒரு வருடத்திற்கும் குறைவான பொறுப்புகள் ரூபா 8,390,148 காணப்பட்டன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதிப் பிரமாணம் 94(1) இன் படி, சேமிப்புகளுக்கு மேலான பொறுப்புகளுக்கு உட்பட முடியாத போதிலும் 20 செலவின

விடயங்களுக்கான ஏற்பாடுகளை மிகைத்து ரூபா 6,269,600 தொகையான பொறுப்புகளுக்கு உட்பட்டிருந்தன.

(ii) 8 செலவின விடயங்களுக்கு பொறுப்புப் பெறுமதி பொறுப்புப் பதிவேட்டின் படி ரூபா 962,633 தொகையால் இணங்கியிருக்கவில்லை.

(iii) பொறுப்புக்கள் தொடர்பாக 02 நிறுவகங்களால் பெறப்பட்ட மீதி உறுதிப்படுத்தலின் படி ரூபா 154,142 தொகையான இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது.

(iv) 09 செலவின விடயங்களின் பொறுப்புப் பெறுமதிக்கும் உறுதிச்சீட்டின் படியான பொறுப்புப் பெறுமதிக்கும் இடையே ரூபா 198,636 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

## 2.5 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகள் என்பனவற்றுடன் இணங்கியிராத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை** | | |
| (i) XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.5 ஆம் பந்தி | 123,354 | ஓய்வுபெற்ற மற்றும் மரணமடைந்த 02 உத்தியோகத்தர்களின் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன் மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ii) XXIV ஆம் அத்தியாயத்தின் 4.4.1 , 4.5, 4.6 ஆம் பந்தி | 293,570 | வேலை இடைநிறுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 03 முதல் |

| | | | |
|---|---|---|---|
| | | | 05 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியை மிகைத்த கடன் மீதிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| XXIV ஆம் அத்தியாயத்தின் 3.7 ஆம் பந்தி | | - | 09 உத்தியோகத்தர்களின் 2013 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் விழா முற்பணம் அறவிடப்படுவதற்கு 06 முதல் 09 மாத கால தாமதம் ஏற்பட்டிருந்தன. |

**(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்**

| | | | |
|---|---|---|---|
| (i) | நிதிப் பிரமாணம் 245 (2) | - | உறுதிச்சீட்டுக்களின் பிரதிகளில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. |
| (ii) | நிதிப் பிரமாணம் 316 (அ) | - | சிறுவர் வழிகாட்டல் நிலையத்தின் கட்டுநிதிப் பணம் பாதுகாப்பான பெட்டியொன்றில் வைத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப் பிரமாணம் 371 (ஆ) | 33,000 | முற்பணம் செயற்பாடு முடிவுற்றதை உடனடுத்து தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 03 உத்தியோகத்தர்களுக்கு 03 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்த முற்பணம் தீர்க்கப்படுவதில் 11 நாட்கள் முதல் 02 மாதங்களுக்கு இடைப்பட்ட காலதாமதம் காணப்பட்டது. |
| (iv) | நிதிப் பிரமாணம் 756, 757 | - | வாகனம் தொடர்பான மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (v) | நிதிப் பிரமாணம் 1645 | - | முறையாகவும் முறைப்படியும் பூரணப்படுத்தப்பட்ட வாகன சம்பவக் குறிப்பேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

(vi) நிதிப் பிரமாணம் 1645 (ஆ) - சாரதியால் 268 ஆவது பொதுப் படிவத்தின் படி நாளாந்த ஓட்ட அட்டவணைகள் பேணப்பட்டு நிர்வாக உத்தியோகத்தர்களால் அதனை நாளாந்தம் பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) நிதிப் பிரமாணம் 1646 - மாதாந்தப் பொழிப்பின் மூலப் பிரதியுடன் உரிய மாதத்தின் நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் உரிய திணைக்களத் தலைவரூடாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(viii) நிதிப் பிரமாணம் 1647 (3), நிதிப் பிரமாணம் 802 - வாகனப் பதிவேடு நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை.

**(இ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை**

(i) 1990 ஒக்டோபர் 10 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கை 2.11 ஆம் பந்தி - ஓவ்வொரு 06 மாதங்களுக்கு ஒரு தடவையும் எரிபொருள் பயன்பாடு பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் இதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 1992 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய 26/92 ஆம் இலக்கம் - குழாம் மோட்டார் வாகனம் ஒன்றில் அரசாங்க இலட்சினை பொறிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) நிதி திட்டமிடல் அமைச்சுச் சுற்றறிக்கை**

(i) 2001 யூலை 02 ஆம் திகதிய 2001/03எம்எப்/ஜீஏ2/சுற்றறிக்கை - பயிற்சி மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாவில் கலந்துகொண்டு

| | | | |
|---|---|---|---|
| | | | வருகை தந்த நாள் முதல் 02 கிழமைகளுக்குள் உரிய பயிற்சி/ வெளிநாட்டுச் சுற்றுலாவிற்குரிய அறிக்கைகள் நிதி, திட்டமிடல் அமைச்சிற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2010 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் முதல் 2013 யூலை வரை வெளிநாட்டில் இருந்த 20 உத்தியோகத்தர்களால் அவ் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 2010 ஒக்டோபர் 11 ஆம் திகதிய சுற்றறிக்கை இல. 01/2010/01 இன் 3(iii) | 588,915 | கல்வி அல்லது பயிற்சிக்காக வெளிநாட்டிற்காகச் செல்லும் சந்தர்ப்பத்தின் போது அமையக் கொடுப்பனவு வெளிநாட்டு அரசாங்கம் அல்லது நிறுவகம் செலுத்தப்படாத நிலையில் மாத்திரம் நாளொன்றிற்கு ஐக்கிய அமெரிக்க டொலர் 30 படி ஆகக் கூடுதலாக 30 நாட்களுக்கு செலுத்தப்படக் கூடியதாகக் குறிப்பிடப்பட்ட போதிலும் 11 உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டில் இருந்த நாட்களின் போது குறித்த செலவினத்தை ஏற்பதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அமையச் செலவினங்கள் செலுத்தப்பட்டிருந்தன. |

**(உ) திணைக்களச் சுற்றறிக்கை மற்றும் கடிதம்**

----------------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| (i) | சமூக சேவைகள் பணிப்பாளரின் 2011 செப்தெம்பர் 19 ஆம் திகதிய எஸ்எஸ்/4/1/1-1 ஆம் இலக்க கடிதத்தின் 03 ஆம் பந்தி | - | நிறுவகத்தின் பயிலுனர்களைச் சேர்க்கும் நேர்முகப் பரீட்சைக்காக திணைக்கள உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டிராததுடன் 02 நிறுவகங்கள் தேர்ந்தெடுத்த |

| | | | |
|---|---|---|---|
| | | | பயிலுனர்களின் பெயர்களும் ஏனைய உரிய தகவல்களும் அடங்கிய பதிவேடு அங்கீகாரத்திற்காக திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 1988 யூன் 22 ஆந் திகதிய 385 ஆம் இலக்க சுற்றறிக்கை - 02 ஆம் பந்தி | - | திணைக்களத்தால் உதவி பெறப்படும் ‘‘சுகித’’ மகளிர் தொழிற்பயிற்சி நிறுவகத்தில் பயிற்சி பெறும் பயிலுனர்களின் அங்கவீனத்தை உறுதிப்படுத்துவதற்காக உரிய மருத்துவ அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| - | 03(v) ஆம் பந்தி | - | மாற்றுத்திறனாளிகளுக்காக நடாத்தப் படுகின்ற பாடநெறிகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாட விதானங்களின் படி தயாரிக்கப்பட்டு சமூக சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் 10 தொண்டர் நிறுவனங்களால் அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 2011 செப்தெம்பர் 19 ஆம் திகதிய எஸ்எஸ்/4/1/1-1 ஆம் இலக்க கடிதத்தின் 7 ஆம் பந்தி | - | பயிலுனர் படிப்பணக் கொடுப்பனவுகளுக்கு உரித்தான சகல உறுதிச்சீட்டுக்களும் பரீட்சிக்கப்பட்டதை அடுத்து சமூக சேவைகள் உத்தியோகத்தரின் அறிக்கையுடன் பிரதேச செயலாளரூடாக மாதாந்தம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 04 நிறுவகங்களின் படிப்பண உறுதிச்சீட்டுக்கள் அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் தாமதக் காலப்பகுதி 02 மாதங்களுக்கும் 07 மாதங்களுக்கும் இடைப்பட்ட நிலையில் காணப்பட்டது. |

**2.6 செயற்திட்ட அமுலாக்கலிலான குறைபாடுகள்**

**பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் முன்னேற்றமடைந்திராத செயற்திட்டங்கள்**

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்திறன் கல்வி ஆணைக்குழுவால் மாற்றுத்திறனான இளைஞர் யுவதிகளுக்காக நடாத்தப்படும் தொழிற்திறன் பயிற்சிப் பாடநெறிகளின் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக நிதியுதவி வழங்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் பின்வருமாறு 2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகளின் போது கிடைக்கப்பெற்ற ரூபா 729,050 தொகையில் ரூபா 713,289 தொகை 2014 மார்ச் கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரையிலும் உரிய நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படாது பொது வைப்புப் பதிவேட்டில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது. இதற்காக ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.7 செயலாற்றல்**

2013 இன் வருடாந்த பாதீடு மதிப்பீடு, கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி திணைக்களத்தின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) போதியளவில் மேற்கொள்ளப்படாத செயற்பாடுகள்

திணைக்களத்தால் போதியளவில் மேற்கொள்ளப்படாத செயற்பாடுகள் சில பின்வருமாறாகும்.

i. சிறுவர் வழிகாட்டல் நிலையத்தின் ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தின் போது 2003 ஆம் ஆண்டின் போது பதிவாகியுள்ள மாணவர்களின் எண்ணிக்கையான 134 உடன் ஒப்பிடுகையில் 2012 ஆம் ஆண்டின் போது குறைவு 51 சதவீதமாகக் காணப்பட்டது.

ii. பதிவாகிய சிறுவர்களின் பின்தொடர் நிலை தொடர்பான ஓர் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

iii. பாதிப்பிற்குள்ளான சிறுவர்கள் (0 – 18 வயது வரை) தொடர்பாக தேவையான தரவுகளை சேகரிப்பதற்கு போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

iv. சிறுவர் வழிகாட்டல் நிலையத்தால் 2003 - 2012 வரை சேவைகளைப் பெற்றுகொண்டு மாற்றுத்திறனாளிகளின் எண்ணிக்கை 973 ஆகக் காணப்பட்டதுடன் சிறுவர் வழிகாட்டல் நிலையம் மேல் மாகாணத்தில் இருந்தமையால் அம் மாகாணத்தில் கூடிய பங்களிப்பான அதாவது 94 சதவீதமான அளவு சேவைகளைப் பெற்றிருந்ததுடன் 25 மாவட்டங்களில் 12 மாவட்டங்கள் 09 ஆண்டுகளின் போது ஒரு மாற்றுத்திறன் சிறுவனுக்காகவும் சேவைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிராததுடன் ஏனைய மாவட்டங்களிலும் இப் பங்கேற்பு மிகவும் குறைவாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

v. சிறுவர் வழிகாட்டல் நிலையத்தால் தயாரிக்கப்பட்டிருந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் காண்பிக்கப்பட்ட 2013 அரையாண்டின் போது மேற்கொள்ளப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த கீழே காண்பிக்கப்பட்ட செயற்பாடுகள் நிலையங்களால் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. எதிர்பார்க்கப்பட்டவாறு ஏற்பாடுகள் கிடைக்கப்பெற்றிராமையால் திட்டமிடப்பட்டவாறு செயற்படுவதற்கு முடியாதிருந்தமை அமைச்சுச் செயலாளரால் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

- முன்பள்ளிகளில் ஏனைய சிறுவர்களின் பெற்றோரை அறிவூட்டல்
- ஒருங்கிணைப்பு முன்பள்ளிகளுக்கு வளங்களை வழங்குவதற்கு முற்படல்
- புனர்வாழ்வு சேவைகளை ஆரம்பித்தல்
- ஆலோசனைச் சேவைகளை ஆரம்பித்தல்
- விசேட புனர்வாழ்வு முன்பள்ளிகளை ஆரம்பித்தல்
- முன்பள்ளிகளை அவதானித்து ஆலோசனைகளை வழங்குதல்/பயிற்சியளித்தல்
- சிறுவர்களை முறையான கல்விக்காக தொடர்புபடுத்துவதற்கு முற்படுவதன் மூலம் பின்பொறுப்பு நிகழ்ச்சிகளையும் சிறுவர்கள் ஈடுபடுத்தப்பட்ட பாடசாலைகளை அவதானித்தல்.

(ஆ) **திட்டமிடல்**

**(i) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் கூட்டிணைந்த திட்டத்துடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- செயல்நடவடிக்கைத் திட்டத்தினதும் கூட்டிணைந்த திட்டத்தினதும் ஒவ்வொரு பயிற்சி நிலையத்தினூடாக மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகள் தொடர்பாக தெளிவாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- கூட்டிணைந்த திட்டத்தில் 2013 ஆம் ஆண்டிற்கு உரித்தாக உள்ளடக்கப்பட்டிருந்த 02 செயற்பாடுகள் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**(ii) நோக்கம் எய்தப்படுவதற்கான நடவடிக்கைகள் போதாமை**

மாற்றுத்திறனாளிகள் மற்றும் போதைவஸ்திற்கு அடிமையானவர்கள் தொடர்பான தகவல்கள் முறைமை ஒன்று நாளதுவரையாக பேணப்படுவது தொடர்பாக பின்வரும் உபாய மார்க்கங்களைச் செயற்படுத்துவதற்கு கூட்டிணைந்த திட்டத்தின் மூலம் கண்டறியப்பட்ட போதிலும் அந் நடவடிக்கைகள் இது வரையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- தரவுச் சேகரிப்புப் பொறிமுறையொன்றைச் செயற்படுத்தல்

- திணைக்களத்தில் ஓர் அலகை தாபித்தல்

- தரவுகளைச் சேகரிப்பதன் மூலம் அறிவையும் திறனையும் வழங்குதல்

- நிலவும் தரவுகளுக்காக எளிதாக நுழைவதற்கு இடமளித்தல்

## 2.8 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

மனநோயால் பாதிப்புறும் ஊனமுள்ள 12 சிறுவர்களுக்காக தங்குமிட பாதுகாப்பு வீடொன்றைப் பராமரித்து செல்வதற்காக மீளாய்வாண்டின் போது

ரூபா 1,449,900 தொகை “உதபாதி” இல்லத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மனநோயால் பாதிப்புறும் சிறுவர்களுக்காக தங்குமிட பாதுகாப்பு வீடொன்றைப் பராமரித்துச் செல்வதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2010 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை சிறுவர்களைச் சேர்த்தமைக்கான தகவல்கள் இருக்கவில்லை.

(ஆ) சிறுவர்கள் தொடர்பான தகவல்கள் திணைக்களத்திடமில்லாததுடன் அவ்வீடு கண்காணிக்கப்பட்டமைக்கு தகவல்கள் இருக்கவில்லை.

## 2.9 முகாமைத்துவ பலவீனங்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) பயன்பாட்டிற்கு தகைமையற்ற 04 வாகனங்கள் கைதவிர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் போது இருந்த பயிலுனர்களின் 48 வைப்புப் புத்தகங்கள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. அவர்களுக்கு 2012 ஒக்டோபர் முதல் திசெம்பர் வரையான காலப்பகுதிக்காக கொடுப்பனவிற்காக அனுப்பிவைக்கப்பட்டிருந்த ரூபா 408,265 தொகை 2013 நவம்பர் 01 ஆம் திகதி வரையிலும் குறித்த வங்கிக் கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட்டமைக்கு கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட முடியாதிருந்தது.

(இ) 18 வயதிற்கும் 40 இற்கும் இடைப்பட்ட வயதையுடைய மாற்றுத்திறனாளிகளுக்கு தொழிற்திறன் பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு தொண்டர் அமைப்பொன்றினால் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் ஆண்டின் ஒரு காலப்பகுதியின் போது அந் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட முறைமை ஒன்று திணைக்களத்தால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிதி, திட்டமிடல் அமைச்சின் 2013 பெப்ரவரி 20 ஆம் திகதிய 13/0232/534/001 ஆம் இலக்க கடிதத்தின் படி மாற்றுத்திறனுள்ள சிறுவர்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்காக முறையான நடைமுறை

ஒன்று தயாரிக்கப்பட்டு அதன் செயல்நடவடிக்கைத் திட்டம் அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டு அதன் படி, எஞ்சிய ஏற்பாடுகள் தொடர்பாக தீர்மானிக்கப்படுவது உகந்ததெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சீதுவை தொழிற் பயிற்சி நிறுவகத்தின் கள ஆய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

i. நிறுவகத்தின் சூழல் அசுத்த நிலையில் காணப்பட்டது.

ii. நிறுவகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் முறைப்படி மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

iii. வழங்கப்படும் உணவுகளில் குறைபாடு நிலவின.

**2.10 மனிதவள முகாமைத்துவம்**

**(அ) அங்கீகரித்த பதவியணியினரும் உள்ளவாறான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறு.

| | **ஊழியர் வகை** | **அங்கீரித்த பதவியணியினர் எண்ணிக்கை** | **உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** | **மிகையான எண்ணிக்கை** |
|---|---|---|---|---|---|
| | ---------------------- | ---------------------- | ---------------------- | ---------------------- | ---------------------- |
| (i) | சிரேஷ்ட நிலை | 10 | 07 | 03 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 164 | 138 | 26 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 491 | 438 | 53 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 92 | 76 | 16 | - |
| (v) | ஏனையோர் (அமைய/ தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | - ------- | 01 -------- | - ------ | 01 ----- |
| | மொத்தம் | 757 | 660 | 98 | 01 |
| | | ==== | ==== | ==== | ==== |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதியில் 98 உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் நிலவின.

**(ஆ) முறையற்ற விதத்தில் வேறு தரப்பினருக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்**

மீளாய்வாண்டின் போது வேறு தரப்பினருக்கு முறையற்ற விதத்தில் விடுவிக்கப்பட்டிருந்த மனித வளங்கள் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | எண்ணிக்கை | வேறு தரப்பினர் | விடுவிக்கப்பட்டிருந்த காலப்பகுதி |
|---|---|---|---|---|
| (i) | சமூக சேவைகள் உத்தியோகத்தர் | 01 | சமூக சேவைகள் அமைச்சு | 2009.04.24 முதல் இது வரை |
| (ii) | சமூக அபிவிருத்தி உதவியாளர் | 01 | சமூக சேவைகள் அமைச்சு | 2012.02.02 முதல் இது வரை |
| (iii) | அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் | 01 | சமூக சேவைகள் அமைச்சு | 1997.07.22 முதல் இது வரை |
| (iv) | சாரதி | 01 | சமூக சேவைகள் அமைச்சு | 2011.03.28 முதல் இது வரை |
| (v) | அலுவலகப் பணி உதவியாளர்கள் | 02 | சமூக சேவைகள் அமைச்சு | 2010.08.22, 2012.01.05 முதல் இது வரை |
| (vi) | சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் | 03 | முதியோருக்கான தேசிய சபை | 2010.10.02 முதல் இது வரை |

| | | | | |
|---|---|---|---|---|
| (vii) | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 01 | முதியோருக்கான தேசிய சபை | 2013.11.01 முதல் இது வரை |

(இ) கடமை ஒப்படைப்பிலான நலிவுகள்

------------------------------------------------------

இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒவ்வொரு பிரிவுகளினதும் விசேடத்துவம் தொடர்பாக கருத்திற்கொண்டு கடமை ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) சமூக சேவைகள் திணைக்களத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் தனியாள் கோவைகளில் நடத்தைக் குறிப்பு உள்ளடங்கலாக ஆவணங்களின் குறைபாடுகள் காணப்பட்ட போதிலும் இதற்காக காலத்திற்குக் காலம் மேற்பார்வை உத்தியோகத்தர்களால் ஆராய்ந்தறிந்து முறையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(iii) முகாமைத்துவ உதவியாளர் சேவையில் போதியளவு உத்தியோகத்தர்கள் இருக்கையில் அவ் உத்தியோகத்தர்களுக்கு சிகாஸ் மற்றும் சம்பளம் தயாரிக்கும் கணனி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக மேலதிக உத்தியோகத்தர் ஒருவர் பயிற்றுவிக்கப்படுவதற்கு செயற்பட்டிராமையால் ஒரு உத்தியோகத்தரின் பால் சார்ந்திருந்த காரணத்தால் இடமாற்றம் போன்ற சந்தர்ப்பங்களின் போது அவ் உத்தியோகத்தர்களும் சிரமங்களுக்கு முகம்கொடுப்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(iv) மேற்கொள்ளப்பட வேண்டிய கடமைகள் நிச்சயமாகவும் தெளிவாகவும் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.